தினமலர்
உண்மையின் உரைகல்

ஆகஸ்ட் 07,2014 IST

உலக தமிழர் செய்திகள்

## சிங்கப்பூரில் நயினார் முஹம்மது நினைவுக் கூட்டம்



View More Photo

சிங்கப்பூர்: திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை) ஏற்பாட்டில், அக்கல்லூரியின் முன்னாள் முதல்வர் சி. நயினார் முஹம்மதுவின் கல்விப்பணியையும், தமிழ்ப்பணியையும், சமூகப்பணியையும் நினைவு கூர்ந்து, நினைவுக் கூட்டம் நடைபெற்றது.

சங்கத் தலைவர் முஹிய்யத்தீன் அப்துல் காதர் தலைமை வகித்தார். நயினார் முஹம்மது பற்றிய முக்கிய குறிப்புகளை, சங்கத் துணைத்தலைவர் கலந்தர் மொஹிதீன் எடுத்துரைத்தார். எழுத்தாளர் ஜே.எம்.சாலி, பன்னூல் ஆசிரியர் டாக்டர் ஹிமானா சையத், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் சங்க பொதுச்செயலாளர் மு.அ. மசூது, பேராசிரியர் அப்துல் கரீம், எழுத்தாளர் ஷாநவாஸ் அப்துல் காதர், பேராசிரியர் அமானுல்லாஹ் ஆகியோர் நயினார் முகமது ஆற்றியப் பணிகளை நினைவுகூர்ந்தனர். பென்கூலன் பள்ளிவாசலின் இமாம், உஸ்தாத் அப்துல் கையூம் பாகவி சிறப்பு பிரார்த்தனை செய்தார்.

தினமலர் வாசகர் முஹிய்யத்தீன் அப்துல் காதர் ( தலைவர், ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம்)



